நடைபெற்று வருகிறது. அதைப்போல இறந்து போன குழந்தைகளின் குடும்பங்களுக்கும், காயம்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் எந்த அளவுக்கு நிதி உதவி அளிக்க முடியுமோ, அது அளிப்பது குறித்த கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனுட்சிசுந்தரம் : சூறுவளிக் காற்று அங்கே வீசியதால், வேறு எந்தப் பகுதியிலாவது சிறு சேதமாவது ஏற்பட்டிருக்கிறதா ?

திரு. ஆ. நல்லசிவம் : நானும் அது குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன. அந்தப் பள்ளிக்கூடம் குழந்தைகள் தங்குவதற்கு ஏற்றதுதான என்பதற்கு ஏதாவது சர்ட்டிபிகேட் பெறப்பட்டிருக்கிறதா ? அதை அரசு கவனித்ததா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவரவர்களே, 8ஆம் தேதியன்று....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கொஞ்சம் இருங்கள். அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. நல்லசிவம் அவர்கள்

(3) சென்னை அம்பத்தூரிலுள்ள சதர்ன் ஸ்விட்ச்கிர் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. ஆ. நல்லசிவம் : மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

> ''சென்னை அம்பத்தூரிலுள்ள சதர்ன் ஸ்விட்ச்கிர் நிறுவனத்தில் உள்ள இயக்குநர்களின் உட்பூசலால் அந்தத் தொழிற்சாலை கடந்த 8 மாத காலமாக மூடப்பட்டு, அதில் பணிபுரியும் சுமார் 500—க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் பட்டினியால் அவதியுறும் பதட்டநிலை குறித்து''

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவரவர்களே, ''தி சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட்'' என்பது சென்னைக்கருகிலுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஒரு பொறியியல் தொழில் நிறுவனம்.

மேற்சொன்ன நிறுவனத்தின் தொழிலாளர்கள் 1977 நவம்பர் மாதத்தில் பல கோரிக்கைகள் அடங்கிய பட்டியல்மீது தொழில் தகராறு ஒன்று எழுப்பினர். சென்னையிலுள்ள செங்கல்பட்டு தொழிலாளர்துறை அலுவலர் அந்தக் கோரிக்கைகள்மீது பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோது, நிர்வாகத்தினர் தங்களின் நெருக்கடியான நிதி நிலைமையை அனுசரித்து தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற 6 மாத காலம் பொறுத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். நிர்வாகத்தினரின் போக்கு தொழிலாளர்களுக்குத் திருப்தியளிக்கவில்லையாதலால், அவர்கள் 1-3-78 முதல் வேலைநிறுத்தம் மேற்கொண்டனர்.

சென்னை இரண்டாவது தொழிலாளர் துறை துணை ஆணையர் மேற்படி தொழில் தகராறை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். ஆயினும் உடன்பாடு ஏற்படவில்லை. தொழிற்சாலையில் வேலை துவங்குவதற்கு உடனடியாக ரூ. 5 லட்சம் அளவுக்கு நிதி உதவி தேவைப்படுமென்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

போதுமான நிதியுதவி ஸ்டேட் பாங்கியிலிருந்து கிடைக்காமையால் இத்தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பாங்கிற்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இதன் விளைவாக கூடிய விரைவில் நிவாரணம் ஒன்று காணப்படும் என்றும் நம்பப்படுகிறது.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவரவர்களே, 6 மாத காலமாக அந்த ஆலை மூடப்பட்டுக் கிடப்பதாலும், அந்த ஆலைக்கு பாங்க் கடன் கொடுக்கிற வாய்ப்பு இல்லாததாலும், அரசே அந்த ஆலையை எடுத்து நடத்த முன்வருமா? அதற்கிடையிலே வேலையில்லாமல் தத்தளிக்கும் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தாற்காலிக நிவாரணம் அளிக்கப்படுமா?

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, on a point of order....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் பதில் சொன்ன பிறகு சொல்லலாம்.

திரு. வே. தங்கபாண்டியன் : அமைச்சரைப்பற்றிதான்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் பதில் சொன்ன பிறகு சொல்லுங்கள். The matter has been taken up with the Bank and it is hoped that an early solution will be found.

1978 செப்டம்பர் 14]

(பிற்பகல் 3-50)

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் பட்டாடை மாறியிருப்பதால், அவர் பதட்டம் ஏற்பட்டு பதிலை பாதியிலேயே நிறுத்தியிருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டரா ?

(4) மோகனூர் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவர் அவர்களே, மோகனூரில், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிர்வாகத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்கும் தகராறுகள்.....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விஷயத்திற்குள் போக வேண்டாம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தகராறு ஏற்பட்டு அந்த ஆலை மூடப்பட்டிருக்கிறது. அதனால் கரும்புப்பயிர் செய்பவர்கள் அறுவடை செய்ய முடியாமல் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். இது குறித்து நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதைப் பற்றி பதில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முடிந்த வரைக்கும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். கடைசி நாள் ஆகையால், அமைச்சரிடத்திலேயிருந்து விளக்கம் பெற முடியவில்லை. அந்தத் தகவல்கள் சேகரித்து உங்களுக்கு அனுப்பப்படும்.

7. தகவல் கோரல்

பாராளுமன்றச் செயலாளர்கள் குறித்து.

திரு. செ. முத்துசாமி : இந்த அவையிலே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பாராளுமன்றச் செயலாளர்கள் பற்றிய பிரச்சினை வந்தபோது, அவர்கள் என்ன முறையிலே நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற அதிகார பூர்வமான அறிவிப்பை ஒரு வார காலத்திற்குள்ளாக அறிவிப்பதாகக் கூறினார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் தான் எழுப்ப முடியும். இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

திரு. செ. முத்துசாமி : பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனாவது: